செய்தி வெளியீடு எண்.18 நாள்.08.01.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததை தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நெற்பயிர்கள் பயிரிடப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப.,அவர்கள், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி.வேணுகோபால், ஆகியோர் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததை தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நெற்பயிர்கள் பயிரிடப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி.வேணுகோபால், ஆகியோர் தொடர்ந்து மூன்றாவது நாளாக இன்று (08.01.2017) நேரில் பார்வையிட்டு களநிலை உண்மை அறியும் ஆய்வு மேற்கெண்டனர்.

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் மப்பேடு பகுதிகளை நேரடியாக பார்வையிட்டு விவசாயிகளை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது திருவள்ளூர் மாவட்டத்தில் 2 அமைச்சர்கள், கண்காணிப்பு அலுவலர் ஆகியோர் தலைமையில் வறட்சி பாதித்த இடங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மாவட்டத்தில் 6114.8 ஹக்டேர் நெற்பயிர் நிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. 103 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. அனைத்து தரப்பு விவசாயிகளையும் நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை அறிந்து வருகிறோம் களநிலை உண்மை அறியும் பணிகள் குறித்த அறிக்கை அரசுக்கு வழங்கப்படும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், திருவள்ளூர் வட்டாட்சியர் திருமதி.கார்க்குழலி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~